2002 ஏப்ரல் 24]

வினா எண் *225*, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

225—

விடுதிக் கட்டடம்

***11092—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், இராமியனஹள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிதாக மாணவர் விடுதி கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதையும் தாங்கும் இதயம் கொண்ட எங்கள் கழகக் காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி விடை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், இராமியனஹள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட விடுதிக்கு அருகில் தேவையான அரசு புறம்போக்கு நிலம் அல்லது தானமாக வழங்கும் நிலம் கிடைக்கும்போது அரசின் நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வணங்குகின்ற இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நிதியாண்டில் எனது தொகுதியில் மட்டும் தமிழகத்தில் அதிகப்படியான 6 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி

அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடந்த நிதியாண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்காக வழங்கப்படுகிற மாதாந்திர உணவுக்கான நிதியை ரூபாய் 225-லிருந்து ரூ.300-ஆக உயர்த்தி தந்த நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் இராமியனஹள்ளி மேல்நிலைப் பள்ளி என்பது என்னுடைய தொகுதிக்குட்பட்டதாகும். இந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் விடுதி தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அந்த வாடகைக் கட்டடம் தற்போது சுகாதாரம் மற்றும் நல்ல காற்றோட்டம் உள்ள சூழ்நிலையில் அங்கே இல்லை. போதுமான கட்டட வசதிகள் அங்கே இல்லை. எனவே, அந்த மாணவர்களுடைய நலன் கருதி இந்த நிதியாண்டிலே அதற்கு, விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்புகள் கீழ்க்கண்ட அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

தேர்வு செய்யப்படும் இடத்தில் முழுவதாக விடுதி இயங்க வேண்டும். கட்டட உரிமையாளர்களால் காலி செய்யுமாறு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளவர்களாக இருக்க வேண்டும். கட்டட உரிமையாளர்களால் காலி செய்யுமாறு வற்புறுத்தப்பட்டவர்கள், விடுதி கட்டத் தேவையான நிலங்கள் உள்ளனவா, அப்படி வசதிகள் இல்லாத பழுதடைந்த நிலையிலுள்ள விடுதிகள் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, அந்த அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 226, திரு. ப. நீலகண்டன். மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.